# பூத்தெழும் புதுவாழ்வு மேலதிக கேள்விகள் மற்றும் விடைகள்

**1.இந்தியாவில் மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப துறையில் கல்வியை நிறைவு செய்தவர்கள் நாடு திரும்பும் போது அவர்கள் அங்கு பணியாற்றுவாற்கான வாய்ப்புகள் உள்ளதா? அவ்வாறு பெற எத்தகைய நடைமுறையை பின்பற்ற வேண்டும்?**

**2.இலங்கை அரசு மருத்துவம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் கல்வி பயின்றவர்களுக்கு இலங்கை அரசின் அங்கீகாரம் கிடைப்பதில் சிரமங்கள் உள்ளதாக அறிகின்றோம். .இது தொடர்பான தெளிவினை எதிர்பார்கின்றோம்?**

**3.இந்தியாவில் பிசியோதெரபி நிறைவு செய்து நாடு திரும்புகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா எந்தளவு வாய்ப்புள்ளது?**

உப வைத்திய துறைகளை பொறுத்த வரையில்(BSC Nursing , pharmacy ,Psychotherapy,Medical Lab Technician) போன்ற துறைகளில் இந்தியாவில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்கள் இலங்கை மருத்துவ கழகத்தினால் (SLMC) இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பின் அதற்குரிய சரியான ஆவணங்கள் மற்றும் இங்கு கேட்கப்படும் துணை ஆவணங்களும் இணைக்கப்பட்டு தகுதிச்சான்றிதழ் பெறப்படல் வேண்டும். (Equal Certificate) அதன்பின்னர் பொது நுழைவுத் தேர்வுகள் எழுதி பணிகளில் இணைவதற்கு வாய்ப்பு உண்டு. தகுதிச்சான்றிதழ் பெற்றிருந்தால் தனியார் துறைகள் மற்றும் தனியாக செயல்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளது. மேலும் அங்கு பன்னிரெண்டாம் வகுப்பு சித்தி பெற்றிருப்பவர்கள் அதற்குரிய தகுதிச்சான்றிதழ் இலங்கையில் பெற்ற பின்னர் இங்கு தாதியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகள்வரும்போது தகுதிச்சான்று அடிப்படையில் இந்தியாவில் கல்வி கற்றவர்கள் தாதியர் பயிற்சி கல்லூரியில் சேர்ந்து தாதியராக வாய்ப்புகள் உண்டு. அவ்வாறே இங்கு க.பொ.த உயர்தர தகுதியுடன் கோரப்படும் எல்லா பொது தேர்வுகளிலும் பங்கு பற்றி சித்தி அடைந்தால் அதன் அடிப்படையிலும் பணியில் சேர வாய்ப்பு உண்டு.

**4.முதியோர் ,விதவை உதவிப்பணங்கள் இந்தியாவில் வழங்கப்படுவதைப்போன்று இலங்கையிலும் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் உள்ள மக்கள் விதவைப்பணம் 250.00 வழங்குவதாக ஸ்கைப் கலந்துரையாடலில் அறிந்தோம் இதனை உறுதிப்படுத்த முடியுமா?**

இலங்கையில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தம் 2000 ரூபா வழங்கப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்டிருப்பின் முதியோர் அடையாள அட்டை பெறும் வாய்ப்பு உண்டு. இதன் அடிப்படையில் சில இடங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால் வயது முடிந்த பின்னரே உதவித்தொகை பெற தகுதி உடையவர். விதவை பெண்கள் மற்றும் தங்கி வாழ்பவர்கள் வேலை செய்ய இயலாதவர் எனில் ஒரு நபருக்கு 200 ரூபா, இரண்டு நபர்கள் இருப்பின் 300 ரூபா ,மூன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இருப்பின் 450 ரூபா வழங்கப்படுகிறது.

**5.இரண்டு பெயர் உள்ள ஒரு நபருக்கு இலங்கை பிறப்பு சான்றில் 13 வது கூட்டில் இப்பெயரை சேர்த்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிந்தோம். இந்த நடவடிக்கை எந்தளவு உண்மை என உறுதிப்படுத்தவும்**

இரண்டு பெயர் உள்ள ஒரு நபருக்கு இலங்கை பிறப்புசான்றில் 13 வது கூட்டில் பெயரை சேர்த்தல் ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது அவரது சரியான தொடர்ச்சியாக அவர் பாவனைக்கு பயன்படுத்தும் பெயரையே 13 வது கூட்டில் பதியப்படும். பின் 13ம் கூட்டில் உள்ள பெயரையே பயன்படுத்தவேண்டும்.திருத்தம் செய்வதற்கான நடைமுறைகளாக

முதலில் பத்திரிக்கையில் தனது பெயரை மாற்றம் செய்ய உள்ளேன் இனிவரும் காலம் தொடர்சியாக இப்பெயரையே பயன்படுத்துவேன் என தகவல் அறிவித்தல்.

பின்.இதற்கான இணை ஆவணங்கள் சேகரித்து பிரதேச செயலகத்திலுள்ள மாவட்ட பதிவாளர் அலுவகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். ஆவணங்களாக பெயர் திருத்தத்துக்குரியவரின் பிறப்பு சான்றிதழ்,பெற்றோரின் பிறப்பு சான்றிதழ்கள்,திருமணசான்றிதழ், குடும்ப அடையாள அட்டை, வங்கி புத்தகம், சகோதரர்களின் சான்றிதழ், திருத்தம் செய்பவர் திருமணம் செய்திருப்பின் அவரின் திருமண சான்றிதழ், பாடசாலை கடிதம், கிராம அலுவலரின் கடிதம்,

முகாம் அடையாள அட்டை , மருத்துவ அட்டை ஆகிய ஆவணங்கள் ஒப்படைக்க வேண்டும்

**6. பட்டப்படிப்போடு நாடு திரும்பியவர்களுக்கு பாடசாலையில் ஆசிரியர் பணி கிடைத்தால் ஆரம்ப சம்பளமாக எவ்வளவு கொடுக்கப்படுகிறது. எத்தனை ஆண்டுகளில் அவரது சம்பளம் உயர்த்தப்படும்?**

பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்கள் இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழுவில் ( இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழுவால் இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக சான்றிதழ்கள் ) பெற்று ஆசிரிய பணியில் சேரக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு அடிப்படை சம்பளமாக ரூபா 27740 வழங்கப்படும். 6 வருட சேவையின் பின்னர் வருடத்திற்கு 300 ரூபா வீதம் சேர்த்து வழங்கப்படும். அடுத்த 7 ஆம் ஆண்டுகளுக்கு வருடத்திற்கு 380 ரூபா வீதம் அதிகரித்து வழங்கப்படும். அதன் பின்னர் 445 ரூபா அடுத்த இரண்டு வருடங்களுக்கு அதிகரித்து வழங்கப்படும். மொத்தமாக 33090 ரூபா அடிப்படை சம்பளமாக கிடைக்கும் இதில் சில பிடித்தங்கள் போக 32200 ரூபா கிடைக்கும். மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தருக்கு விசேட கொடுப்பனவு(Allowance) கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**7. 5ம் வகுப்பில் புலமைப்பரிசில்தேர்வு அனைவரும் எழுத வேண்டுமா?அப்பரீட்சையில் சித்தியடையாவிட்டால் 6 ம் தரத்திற்கு உயர்த்தப்பட மாட்டார்களா ? இத்தேர்வு நடத்துவதின் நோக்கம் என்ன?**

5ம் வகுப்பு புலமைப்பரிசில் தேர்வை அனைத்து குழந்தைகளும் எழுத வேண்டும் என்ற நிலையே இன்றும் உள்ளது. எனினும் 6ம் வகுப்பிற்கு செல்வதற்கு பாடசாலை பெறுபேறுகளே போதுமானது. மேலும் இலங்கை அரசின் கல்வி கொள்கையின்படி 10ம் வகுப்பு வரை எந்த குழந்தையும் வகுப்பு இறக்கம் செய்யப்படுவதில்லை .ஆனால் 5ம் தர புலமைப்பரிசில் மாவட்ட மட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு (Cut of mark ) மேல் எடுத்து சித்திஅடைந்தால் மாதாந்தம் அந்த குழந்தையின் பெயரில் மாதம் 500 ரூபா வைப்புக்கணக்கில் போடப்படும். மேலும் அந்த குழந்தை விரும்பிய பள்ளியில் பயில்வதற்கு வாய்ப்பு உண்டு. அதே வேளை மாணவன் வரவை ஊக்கப்படுத்துவதற்காக பாடசாலை வராத நாட்களுக்கு அந்த ஊக்கத்தொகையிலிருந்து குறைக்கப்படும்.

**8. எல்லா மாவட்ட வைத்தியசாலைகளிலும் அனைத்து விதமான நோய்களுக்குமான சேவை உள்ளதா? எந்த எநத வைத்திய சேவையை செய்ய போதனா வைத்திய சாலைக்கு செல்ல வேண்டியுள்ளது?**

இலங்கையில் கிராம வைத்திய சாலை , ஆதார வைத்திய சாலை , மாவட்ட வைத்தியசாலை மற்றும் போதனா வைத்திய சாலைகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்ட வைத்தியசாலைகளிலும் அனைத்து விதமான மருத்துவ தேவைகளுக்கு வாய்ப்புகளும் வசதிகளும் உள்ளன மிக அரிதான நோய்களுக்கு தேவை ஏற்படின் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்படுவர். சில நோய்களுக்கென பிரத்தியேகமாக செயல்படக்கூடிய வசதி வாய்ப்புகள் அங்கு உள்ளது.

**9.நடுத்தர குடும்பங்களின் மின்சார உபகரணங்களின் பாவனை மட்டுப்படுத்த அளவில் பயன்படுகிறது. அந்த அளவிற்கு மின்சார கட்டணம் அதிகம்மா மின்சார கட்டணம் எவ்வளவு?**

பொதுவாக சாதாரண அளவில் மின்பாவணை தொடக்கம் அதிகளவு மின்சாதனம் பயன்படுத்தும் தன்மை அவை பயன்படும் நேரம் மற்றும் மின்சார சிக்கனத்தால் நாம் எடுக்கும் கவனம் போன்ற அம்சங்களில் மின்சார கட்டணத்தின் அளவை பாதிக்கின்றன. எனினும் இலங்கை மின்சார கட்டண அளவீடுகளின் அடிப்படையில்

1. 1 - 61 Unit பாவனை – 1 Unit– 7.25
2. 62 -122 Unit பாவனை – 1 Unit– 7.85
3. 123 -183 Unit பாவனை – 1 Unit–10.00
4. 184 - 224 Unit பாவனை – 1 Unit–27.75
5. 245 - 255 Unit பாவனை – 1 Unit–32.00

நடுத்தர சாதாரன அளவில் பயன்படுத்துபவர்கள் மாதாந்தம் ரூபாய் 300 தொடக்கம் 400 வரை செலுத்துவதாக அறிய முடிகின்றது.

**12.தொழில் துறைகளில் சமமான இட ஒதுக்கீடு இருக்கின்றதா?**

**13.அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பெண்களுக்கான ஊதியங்கள் எவ்வாறு உள்ளன?**

தொழில் துறைகளில் வேலைவாய்ப்புகளை பொறுத்தவரையில் ஆண், பெண் வேறுபாடு இல்லை.(அரசு மற்றும் தனியார்) இலங்கையில் ஒரு நபர் பணிக்கு அமர்த்தப்பட்டால் குறைந்தபடசம் அடிப்படை சம்பளமாக 13500.00 வழங்கப்பட வேண்டும் என்பது அரசு விதியாக உள்ளது. எனினும் தினக்கூலிகளை பொறுத்த அளவில் ஆண் பெண் வேறுபாடு காணப்படுகின்றது.

**14.தேசிய அடையாள அட்டை வழங்கும் போது குடியுரிமை அற்றவர்களுக்கு X போன்ற அடையாளமும் குடியுரிமை உள்ளவர்களுக்கு V என்ற அடையாளமும் இடப்பட்டது. இப்போது இலங்கையில் பிறந்த எல்லோரும் இலங்கை குடியுரிமை பெற்றவர் என்ற நிலையில் இவ் அடையாளங்கள் இப்போதும் போடப்படுகிறதா?**

இலங்கையில் தற்போது இது தொடர்பான எந்த அடையாளமும் போடப்படுவதில்லை வயதை உறுதிப்படுத்தும் பிறந்த திகதி மட்டும் இடப்படும்.

**15.இந்தியாவில் 4 ஏக்கர் காணி இருந்தால் விவசாயத்திற்கு சொட்டுநீர் பாசன உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது இந்த நிலை அங்கு உள்ளதா?**

இலங்கையில் விவசாய செய்கையினை மேம்படுத்துவதற்கும் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிற்கும் ஒரு விவசாய போதனாசிரியர் இருக்கின்றார். ஒரு விவசாயி தொடர்ந்து பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதை விவசாய போதனாசிரியர் உறுதிப்படுத்தினால் தூவல் நீர்ப்பாசனம், சொட்டுநீர்பாசனம், உரவகைகள், விவசாய விதைகள் போன்றவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

**16.இலங்கையில் மாவட்ட வாரியாக விவசாய நிலவரம் பற்றி விளக்குக?**

யாழ்ப்பாணம் - புகையிலை, மிளகாய், காய்கறி வகைகள்

கிளிநொச்சி - நெல் , காய்கறி வகைகள்

வவுனியா - நெல் , சிறுதானிய வகைகள்

முல்லைத்தீவு - வேர்க்கடலை

மட்டக்களப்பு - நெல்

**17. நாடு திரும்புகின்ற அனைத்து மக்களுக்கும் மாதாதாந்த வருமானம் 3500.00 க்கு கீழ் என்ற அடிப்படையில் திட்டத்தில் சமூர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்படுகின்றார்களா அல்லது அவர்களின் குடும்ப நிலையினை அறிந்து உள்வாங்கப்படுகின்றார்களா?**

நாடுதிரும்பும் அனைத்து மக்களும் சமூர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்படுகையில் சில நடைமுறைகள் உள்ளது. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதில் உழைக்கும் நிலையில் உள்ளோர். முற்றும் முன்னுரிமைக்கான ஏனைய தகைமைகள். அத்துடன் மாவட்டத்தின் பயனாளிகளுக்கான ஒதுக்கிடு போன்ற அம்சங்களின் அடிப்படையில் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. எனினும் தாயகம் திரும்பிய பலர் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

**குறிப்பு** ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் சமூர்த்தி திட்டத்தில் உள்வாங்க தகுதியானவர்களின் எண்ணிக்கை் தற்போது இத்திட்டத்தில் பயன்பெறுவோர் எண்ணிக்கை வெளிட பட்டு தகுதி இருந்தும் பலருக்கு இதுவரை கொடுக்கப்படாத வாய்ப்பு இல்லாத நிலை இருப்பதாகவும் . இதற்கான மாகாண அரசு மத்திய ஆரசிடம் நிதிக்கோரிக்கை வைத்துள்ளதாகவும்,தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

**18.இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட காணிகள் உள்ளவர்கள் இந்தியாவில் உள்ளனர். காணி விடுவிக்கும் நிலை எந்தளவு உள்ளது. தற்சமயம் எந்தெந்த இடங்களில் விடுவிக்கப்பட்டுள்ளது.?**

இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட காணிகள் சிறிது சிறிதாக விடுவிக்கப்படுகின்றது. அண்மையில் பலாலி பகுதியில் உள்ள காணிகள் மற்றும் முள்ளிக்குளத்தில் உள்ள காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும் பிரதேச செயலாளர்களின் அறிக்கையின் படி தனியார் காணிகளில் கணிசமான அளவு அரசு காணிகளின் பெருமளவில் இன்னும் இராணுவத்தின்வசம் இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.இந்நிலையில் அண்மையில் ஊடக தகவல்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் 312 ஏக்கர் அரசு நிலமும் 112 தனியார் நிலமும் , கிழக்கு மாகாணத்தில் 318 ஏக்கர் அரசு நிலமும் விடுவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சார்பில்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை நம்பிக்கையூட்டுவதாக உள்ளது.

**19. இலங்கையில் 5 நபர்களுக்கு ஒரு இராணுவம் என்ற அடிப்படையில் தமிழர்பகுதிகளில் உள்ளதாகவும் உலகில் இதுபோன்று எங்கும் இல்லையென அறிகின்றோம். இதனை தெளிவுப்படுத்தவும்?**

இராணுவத்தினரின் எண்ணிக்கை தமிழர் பகுதிகளில் அதிகம் என்ற கூற்று உண்மை தான் எனினும் இராணுவம் சிவில் விவகாரங்களில் தலையிடுவதில்லை. மேலும் பாதுகாப்பு பொறுப்பு முழுக்க முழுக்க காவல்துறையினரிடமே கையளிக்கப்படுகிறது. இத்துடன் இராணுவம் சுற்று நிறுவம் ஒன்றின் அடிப்படையில் 33 படை அணிகளை உட்பட்ட 80 இராணுவ முகாம்கள் குறைக்கப்படவுள்ளதாகவும் இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் 7 படை அணிகளும் , வன்னியில் 9 படை அணிகளும் , முல்லைதீவில் 6 படை அணிகளும் மேற்கில் 1 படை அணியும் குறைக்கப்படவுள்ளதாக வெளியான தகவலில் குறிப்பிட்டுள்ளமையும் நம்பிக்கையூட்டுவதாக உள்ளது.

**20. 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வெழுதி சான்றிதலோடு நாடுதிரும்பும் மாணவர்கள் சிரமம் இன்றி 11ம் வகுப்பில் எல்லா மாவட்டங்களிலும் சேர்க்க முடிகிறதா? அல்லது சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டிய நிலை உள்ளதா?**

இந்தியாவில் 10ம் வகுப்பு தேர்வெழுதி அச்சான்றிதலோடு நாடுதிரும்பும் மாணவர்கள் இலங்கையில் இதற்குரிய தகுதி சான்றிதழாக மாற்றிய பின்னர் 11ம் தரத்தில் சேர்ந்து கல்வி பயிலுவதில் இப்போது எந்த சிரமும் இல்லை.

**21. இலங்கையில் GCE A/L எழுதி சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உள்ள கல்வி வாய்ப்புக்கள் என்ன?**

க.போ.தா(A/L) சித்தியடைந்தவர்கள் 10ந் தர தேர்வில் கணிதம், ஆங்கிளத்தில் திறமை சித்தி இருப்பின் வங்கி சேவைகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.மேலும் இச்சித்தியை அடிப்படை தராதரமாகக் கொண்டு பல்வேறு அரசு தினைக்களங்களிலும், நேர்முகத்தேர்வுகளில் தோற்றி வேலைவாய்ப்புக்கள் பெற வாய்ப்புக்கள் பிரகாசமாகவுள்ளது.

**22. நாடுதிரும்பிய ஒருவருக்கு ஆசிரியர் பணி கிடைத்து அவர் அதிபர் நிலைக்கு உயர வாய்ப்பு உள்ளதா?**

பட்டப்படிப்பை நிறைவு செய்து ஆசிரியர் பணிக்கு தெரிவானர்கள் தமது சேவைக்காலத்தில் அதிபர் தர பரீட்சைகளை எழுதி முறையே 3ம் தரம், 2ம், தரம் 1ம் தரம் அதிபர்களாக மாறக்கூடிய வாய்ப்புள்ளது.

**23. தாய் தந்தை இல்லாத வயது முதிர்ந்த தாத்தா பாட்டியுடன் வாழும் பிள்ளைகள் கல்வித்தொடர நடைமுறையில் உள்ள வாய்ப்புகள் எவை?**

இக்குழந்தைகளுக்கான கல்வியைத் தொடர்வதில் இலங்கையில் கல்வி இலவசம் என்பதால் எவ்வித தடையும் இல்லை. மேலும் இக்குடும்பம் சமூர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்படும் போது 10ம் தரம் சித்தியடைந்ததின் அடிப்படையில் உயர்தர கல்வியைத் தொடர மேலதிக செலவீனங்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. பல்கலைக் கழகத்திற்கு தேர்வாகும் பட்சத்தில் கடனுதவி திட்டத்தின் ஊடாக கல்வியைத்தொடர பிரகாசமான வாய்ப்புள்ளது.

**24. பாடசாலைகளில் சமயம் சார்ந்த பாடங்கள் ( குறிப்பாக சைவநெறி)**
**படிப்பிக்கப்படுகிறதா?**

அனைத்து பாடசாலைகளிலும் கட்டாயம் சமய பாடம் கற்பிப்பது அரசின் கொள்கையாகவுள்ளது. இதன் அடிப்படையில் அனைத்து பாடசாலைகளிலும் அவரவர் சமயங்களை கற்று கொள்வதற்கான அனைத்து வழிவகைகளும் செய்யப்பட்டுள்ளன.

**25.இலங்கையில் அதிகமான மருத்துவ கல்லூரிகள் சிங்கள பகுதிகளில் இருப்பதனால் போதியளவு தமிழ் மருத்துவர்கள் உருவாகும் வாய்ப்பு எந்தளவு உள்ளது.**

க.போ.தா உயர்தர தேர்வெழுதி பல்கலைக்கழக அனுமதிக்கு மாவட்ட அளவிலான வெட்டுப்புள்ளிகள் பெறும் அடிப்படையில் மருத்துவ கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. இவ்வெட்டுப்புள்ளி மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. இவ்வாறு தேர்வு செய்யப்படும் மாணவர்கள் மொத்த மருத்துவ கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கு ஏற்ப மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. சிங்கள பிரதேசங்களில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகங்களில் சிங்களவர்களும், தமிழ் பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழர்களுக்கும் என்று பிரிப்பதில்லை. தகுதி மற்றும் மாவட்ட நிலைமைகளுக்கு ஏற்ப எந்த மருத்துவ பல்கலைக்கழகங்களுக்கும் மாணவர்கள் தேர்வு செய்யப்படலாம். விருப்ப மாறுதள்களுக்கும் இடமுண்டு. இந்த வகையில் கனிசமான தமிழ்பேசும் மக்களும் மருத்துவர்களாக வாய்ப்புள்ளது. எனினும் 1977க்கு முன்னர் தகுதித்தேர்வு

அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இவ்விகிதாசாரம் குறைவானது எனலாம்.

**26. தமிழ் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் சிங்கள மருத்துவர்களே கடமை ஆற்றுவதாக அறிகின்றோம். அதில் எந்தளவு உண்மையுள்ளது.**

சிங்கள மருத்துவர்களும், சிங்கள தாதிகளும் இப்பிரதேசங்களில் கடமையாற்றுகின்றனர் என்பது உண்மையே. இவர்களுக்கு ஒரளவு தமிழ் பேசவும், புரியவும் முடியும். மேலும் தமிழ் தாதியர்களும் மருத்துவர்களும் இணைந்து பணி செய்வதனால் நோயாளர்கள் பெரியளவில் சிரமங்களை எதிர்கொள்ள வாய்ப்பில்லை.

**27. குடியிருக்கும் நிலத்திற்கான வரிகள் நீண்ட காலம் செலுத்தாத்தால் பெரும் தொகை நிலுவையில் உள்ளதாக உறவினர்களும் கூறுகின்றார்கள். நாடுதிரும்பினால் நாடுதிரும்பியோர் என்ற அடிப்படையில் கட்டணம் ரத்து செய்யப்படுமா அல்லது மீள கட்டப்பட வேண்டுமா?**

நிலவரி கட்டுதல் என்பது அந்த நிலம் தமக்கு சொந்தமானது என்பதை உறுதி செய்ய உதவும் ஓர் ஆவணம் ஆகவும் உள்ளது. தற்போது அந்த நிலுவைத்தொகையை கட்டுவது கட்டாயம் ஆகவும் உள்ளது. முழுமையாக கட்ட முடியாவிட்டாலும் பகுதி பகுதியாக கட்டுவதற்கு வாய்ப்புள்ளது. நாடுதிரும்புவோர் விடயத்தில் அது ரத்து செய்வது தொடர்பாக இதுவரை எந்த நடைமுறையும் இல்லை.

**28. புதிதாக தற்போது நடைமுறையில் உள்ள அரசு உதவித்திட்டங்களை வெளிப்படுத்த வேண்டும்?**

புதிதாக எந்த திட்டமும் இல்லை. பூத்தெழும் புதுவாழ்வு புத்தகத்தில் ஏற்கனவே பல்வேறு தலைப்புகளில், பல்வேறு உதவித்திட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது. தாயகம் திரும்புவோர் விடயத்தில் அரசின் சிறப்பான உதவித்திட்டம் தொடர்பான தகவல்கள் ஏதும். இதுவரை இல்லை.

**29.தற்போது புதிதாக உள்ள வேலைவாய்ப்புகள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும்?**

ஆயத்த ஆடை உற்பத்தி மையத்தில் முன் அனுபவம் அடிப்படையில் வேலைவாய்ப்பு.( பல்வேறு தளங்களில்) பனங்களி பிரித்தெடுத்தல். இயந்திரங்களின் உதவியுடன். நண்டு இறால் பதனிடும் தொழிற்சாலைகள், பனைமரங்களில் இருந்து பதனீர் இறக்குதல். போட் திருத்தம் மற்றும் பெயிண்டிங் இவற்றுடன் ஏற்கனவே புத்தகத்தில் குறிப்பிட்டவாறு மேசன் மற்றும் தச்சுத்தொழிலுக்கு வாய்ப்புள்ளது.

**30.நாட்டில் கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடங்கள் உள்ளதா?**

ஆம்,ஏற்கனவே மிகக் குறைந்த அளவில் இருந்த கண்ணிவெடி பிரதேசங்கள் மேலும் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதேச தகவல்களின் படி முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி நிறைவேறவில்லை. அங்குள்ள தரை அமைப்பு மற்றும் அகற்றுவதிலுள்ள சிக்கல்கள் என்பவற்றால் அவற்றை அகற்றுவதற்கு இன்னும் சில காலம் ஆகும் என இதற்கு பொறுப்பான சர்வதேச தொண்டுநிறுவனம் தகவல் அளித்துள்ளது.

**31.இலங்கையில் சங்கக்கடை(ரேசன்கடை) தொடர்பான நடைமுறைகளை விளக்கப்படுத்த முடியுமா?**

இலங்கையில் சங்கக்கடை (ரேசன்கடை) போன்ற செயல்பாடுகள் இல்லை. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என அடையாளம் காணப்படுவோர் சமூர்த்தி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு உதவுத்தொகை வழங்கல், குழுக்களாக கட்டமைத்தல், சேமிப்பு பழக்கதை ஊக்குவித்தல், வாழ்வாதார கடனுதவி திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்பு திட்டங்கள், கல்வி கடனுதவி திட்டங்கள் போன்ற திட்டங்களின் ஊடாக குடும்பத்தின் நிலையை உணர்த்திடும் செயல்பாடு நடைமுறையில் உள்ளது.

ந.ரவீந்திரா ராஜா
மனித வள மேம்பாட்டு பகுதி